# ST. XAVIER'S COLLEGE (AUTONOMOUS)
## PALAYAMKOTTAI - 627 002

(Recognized as "College with Potential for Excellence" by UGC &
Accredited by NAAC at A++ Grade with a CGPA of 3.66 out of 4)

---

### ANNUAL REPORT 2022-2023

## SERVICE ORGANIZATIONS

## தூய பிரிட்டோ பெண்கள் விடுதி

**விடுதியின் சிறப்பு**

தூய சவேரியார் கலைமனைகளின் கீழ் இயங்கி வரும் விடுதிகளில் எமது பிரிட்டோ பெண்கள் விடுதியும் ஒன்று எமது விடுதி கடந்த 6 ஆண்டுகளாக பெண்களுக்கு என்று தொடங்கி இறைவனின் பராமரிப்போடு இயங்கி வருகிறது.

**விடுதியின் நோக்கம்**

எமது விடுதி ஒவ்வொரு தனிப்பட்ட மாணவியையும் ஆளுமையுணர்வுடனும் பக்தி ஒழுக்கம் அன்பு பகிர்வு விட்டு கொடுத்தல் போன்ற வல நல்ல பண்புகளோடு வளர்பதிலும் ஊக்கம் காட்டுகிறது.மாணவிகள் ஓய்வு நேரங்களில் பல கலைகளிலும் தங்களின் தனித் திறமைகளை வளர்த்து கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது . மாணவிகளின் தேவைகளை உணர்ந்து கைதொழிலான ஆரி வேலையை மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவிகளின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அரசு வேலைவாய்ப்பு பெறுவதற்கு பயிற்சி வகுப்புகளுக்கு செல்ல அனுமதி அளித்து ஊக்கப்படுத்தப்படுகிறது.

**விடுதி காப்பாளர்கள்**

தூய தாமஸ் சபை சகோதிரிகள் அருட்சகோ. கலையரசி விடுதி இயக்குனராகவும் அருட்சகோ. அமிர்தம் துணை இயக்குனராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**ஆன்மிக வளர்ச்சி**

வார நாட்களில் பேராசிரியை முனைவர் கோல்டா கிரேஸ் அவர்கள் மாணவிகளுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு பற்றியும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

வார நாட்களில் ஒவ்வொரு வியாழன் அன்று திருப்பலியும் ஒப்புரவு அருட்சாதனமும் நடைபெறுகிறது. வார நாட்களில் செவ்வாய் கிழமை மாதா மன்றாட்டு மாலையில் கலந்து கொள்கிறார்கள்.

**மாணவிகளின் எண்ணிக்கை**

எமது விடுதியில் முதுகலை மாணவிகள் 87 பேர் தங்கி பயன்பெறுகிறார்கள்.

**விடுதியில் நடைபெற்ற விழாக்கள்:**

03.09.2022 அன்று விடுதியில் தூய ஆவியானவர் திருப்பலியானது அதிபர் தந்தை அவர்களால் நிறைவேற்றப்பட்டது. 03.09.2022 அன்று மாலையில் புதிதாக எமது விடுதிக்கு வந்த மாணவிகளுக்கு உற்சாகம் தரும் வகையில் அதாவது புதியவர்கள் தினமாக கொண்டாடப்பட்டு கலை நிதழ்ச்சிகள் நினைவு பரிசுகள் மற்றும் சிறப்பு விருந்தும் வழங்கப்பட்டது.

20.10.2022 அன்று தீபாவளியை முன்னிட்டு மாணவிகள் பட்டாசு வெடித்து மகிழ்ந்தார்கள். 11.12.2022 அன்று தீப திருவிழாவை முன்னிட்டு மாணவிகள் தீபம் ஏற்றி மகிழ்ந்தார்கள். 16.12.2022 அன்று பொங்கல் விழாவை முன்னிட்டு மாணவிகளுக்கு கோலப் போட்டி நடைபெற்றது.

10.01.2023 அன்று அதிகாலை 4 மணிக்கு மாணவிகள் பொங்கல் வைத்து கொண்டாடினார்கள். அதிபர் தந்தை அவர்கள் பொங்கல் திருப்பலி நிறைவேற்றி வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார். 04.02.2023 அன்று இறுதி ஆண்டு மாணவிகள் கேரளா சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். இவ்வாறாக இறைவனின் ஆசிரால் எமது பிரிட்டோ பெண்கள் விடுதியானது சிறப்பாக இயங்கி வருகிறது.